# INTER - RELATIONSHIP BETWEEN TAMIL & MUSLIM COMMUNITY: A STUDY BASED ON NATPIDDIMUNAI

**M. L. Abdul Majith (1), A.S. Lasmiya (2)**

Department Of Sociology, Faculty of Arts and Culture, South Eastern University of SriLanka.
Abdulmajith20m@gmail.com, as19940704@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாறு நினைவுக்கு முந்திய காலப்பகுதியில் இருந்தே இலங்கை அதன் இயற்கை அழகு மற்றும் செழிப்பான பன்முக கலாசாரம் என்பனவற்றின் காரணமாக உலக அரங்கில் தனக்கான ஒரு இடத்தை பிடித்துள்ளது. இலங்கைத் திருநாடு பேரினவாத பௌத்தர்களை பெரும்பான்மையாகவும் தமிழ் முஸ்லிம் சமூகத்தினரை சிறுபான்மையாகவும் கொண்டு விளங்குகின்றது. அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் - முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் இன உறவு மற்றும் இன ஐக்கியம் என்பன வேரூன்றிக் காணப்படுகின்றது. இவ் ஆய்வானது கல்முனை பிரதேசசபைக்குட்பட்ட நற்பிட்டிமுனைப் பிரதேசத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம் இன உறவுகள் எவ்வாறு உள்ளது என்பதற்கான விடையை கண்டறிவதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டும் தமிழ் முஸ்லிம் சமூகத்தினரிடையே காணப்படும் இன உறவுகளை ஆராய்வதனை நோக்கமாகக் கொண்டும் வடிவமைக்கப்பட்டது. இவ் ஆய்வானது பண்புரீதியான ஆய்வாக காணப்படுவதோடு ஆய்விற்காக முதலாம் நிலைத் தரவுகள் பொதுமக்களிடமிருந்து கட்டமைக்கப்படாத நேர்காணல் மற்றும் இலக்குக் குழு கலந்துரையாடல்கள் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், மதிப்பீட்டு அறிக்கைகள் வாயிலாகவும் பெறப்பட்டன. இவ் ஆய்வின் மூலம் இன்றைய சூழலில் இனங்களுக்கு இடையில் வன்முறைகள் குழப்பங்கள் மற்றும் இனவிரிசல்கள் காணப்படுகின்ற நிலையில் இப்பிரதேசமக்கள் மத்தியில் பண்பாட்டு தழுவல்கள், கூட்டுக்கலாசார அமைப்பு, இணைந்துபோதல், ஒத்துப் போதல் மற்றும் கலாசாரப் பரிமாற்றம் என்பன இன்றும் இவர்கள் மத்தியிலான உறவை நல்லுறவாக நிலைநிறுத்தி வைத்துள்ளது. இருப்பினும் கூட இரு சமூகத்தினது இளம் இளைஞர்கள் மத்தியில் சிறு சிறு பிணக்குகளுடன் கூடிய முரண்பாடுகளும் சிறியளவில் இடம்பெறுகின்றன.

**திறவுச் சொற்கள்:** பேரினவாதம், கூட்டுக்கலாசாரம், பண்பாட்டுத் தழுவல், இன உறவு.

**ஆய்வு அறிமுகம்**

இலங்கை பல்லின மக்களைக் கொண்ட ஒரு சிறு தீவாகும். இங்கு பல சமயங்கள் பின்பற்றப்படுவதுடன் தனித்துவமான கலாசாரப் பாரம்பரியங்களும் பேணப்பட்டு வருகின்றன. இதிலும் குறிப்பாக சிறுபான்மை இனங்களாக அடையாளப்படுத்தப்படும் தமிழ் - முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் பன்னெடுங்காலமாக நல்லுறவு மற்றும் முரண் உறவுகள் என்ற விதத்தில் இன உறவுகள் இருந்து வருகின்றன.

**"இலங்கை முஸ்லிம்கள் இனத்தால் தமிழர்கள்"** (சேர். போன் இராமநாதன், 1985) என இலங்கை வாழ் முஸ்லிம்களை தமிழர்கள் என அடையாளப்படுத்துவதும் டாக்டர் இல்யாஸ் என்பவர் பொதுத் தேர்தல் பிரச்சாரமேடையில் **"தமிழர்களும் முஸ்லிம்களும் இரத்த கலப்புள்ளவர்கள்"** என்று பகிரங்கமாக பிரச்சாரம் மேற்கொண்டமையும் 1987ம் ஆண்டு ராணி இதழ் **"இலங்கையில் வாழும் அத்தனை முஸ்லிம்களும் தமிழர்களே, அவர்களின் தாய் மொழியும் தமிழே! அவர்களின் சமயம்**

**மட்டுமே இஸ்லாம்"** என பிரசுரித்தமையும் இலங்கையில் தமிழ் முஸ்லிம் இன நல்லுறவுக்கு பறைசாற்றுகின்றன (சிறுபான்மையினர் சில அவதானங்கள், 2002).

இலங்கையின் கட்டமைப்புக்களின் படி இவ் இனத்தவர்கள் அனைவரும் இலங்கையின் சகல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இருப்பினும் கூட விஷேடமாக கிழக்கு மாகாணம் தமிழ் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணமாக கட்டமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் இவ் இரு சமூக அமைப்பினரும் இறுக்கமான சமூக உறவால் பிணைக்கப்பட்டுள்ளார்கள். முஸ்லிம்களின் வரலாற்றில் இருந்து தமிழர்களையும் தமிழர்களின் வரலாற்றில் இருந்து முஸ்லிம்களையும் பிரித்துவிட முடியாது. முஸ்லிம்களும் தமிழர்களும் **"பிட்டும் தேங்காய்ப் பூவும் போல"** கலந்து வாழ்ந்து வருகின்றார்கள் (றமீஸ் அப்துல்லாஹ்,1997).

முஸ்லிம் தமிழ் உறவுகள் மிகவும் தொன்மையாக காணப்படினும் கூட நிலம், சந்தர்ப்பவாத அரசியல், தமிழ்த் தீவிரவாதிகளின் நியாயமான போராட்டங்களுக்கு எதிராக முஸ்லிம்கள் சாதகமாக இருக்காமை முதலிய காரணங்களால் முஸ்லிம் தமிழ் உறவுகளில் விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. **"இலங்கை முஸ்லிம்கள் மரக்கலத்தில் வந்து குடியேறிய வந்தேறிகள்"** என எஸ்.கே. வடிவேலு குறிப்பிட்டுள்ளார். அதேபோல் **"இலங்கையில் இரண்டு பிரதான இனங்கள் வாழ்கின்றன"** என தினகரனும் **"இலங்கையில் இரு தேசிய இனங்களே உள்ளன. அவை சிங்களவர், தமிழர் ஆகியோரே அந்த இரு இனத்தவர்கள்"** என தினமுரசும் பிரசுரித்தன. மேலும் 1990களில் வட மாகாண முஸ்லிம்கள் தமிழ் விடுதலைப்புலிகளால் இரவோடு இரவாக வெளியேற்றப்பட்டமையும் இவ்விரு இனங்களுக்கு இடையிலான முரண் உறவை வெளிப்படுத்தி நிற்கின்றன (சிறுபான்மையினர் சில அவதானங்கள், 2002).

இந்தவகையில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசசபைக்குட்பட்ட நற்பிட்டிமுனைக் கிராமத்தில் தமிழ் முஸ்லிம் சமூகத்தினர் ஒன்றாக கூடி வாழ்ந்து வருகின்றனர். இருந்த போதிலும் இன்று இவ் இரு சமூகத்தினைச் சேர்ந்த இளம் இளைஞர்களிடையே சிறு சிறு பிணக்குகள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்ற நிலையில், இவ் இரு சமூகக் குழுக்களின் மத்தியில் நிலவும் இன உறவுகள் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை ஆய்வு செய்யும் முகமாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் பிரச்சினை**

இலங்கையில் அடிக்கடி இனங்களுக்கிடையில் இன முறுகல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இலங்கை வாழ் தமிழ், முஸ்லிம் மற்றும் பௌத்தம் என மூவினங்கள் மத்தியிலும் கசப்புணர்வுகள் காணப்படுகின்றன. இருப்பினும் கூட கல்முனை பிரதேச சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனைப் பிரதேசத்தில் தமிழ் முஸ்லிம் இனங்கள் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் இச் சமூகத்தவர் மத்தியில் இன உறவு என்பது எவ்வாறு உள்ளது என்ற வினாவுக்கு விடையளிப்பதாகவே இவ் ஆய்வுப் பிரச்சினை வடிவமைக்கப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

நற்பிட்டிமுனைப் பிரதேச தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியிலான இன உறவைக் கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்விற்காக பண்பு சார் ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டது. முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகள் சேகரிக்கப்பட்டு இவ்வாய்விற்கான முடிவுகள் பெறப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகள் எழுமாற்று அடிப்படையில் கல்முனை முஸ்லிம் பிரதேசசபைக்குட்பட்ட முஸ்லிம் சமூகத்திலிருந்தும் கல்முனை தமிழ் பிரதேசசபைக்குட்பட்ட தமிழ் சமூகத்திலிருந்தும் கட்டமைக்கப்படாத நேர்காணல் மற்றும் இலக்குக்குழு கலந்துரையாடல் (06) என்பன மூலம் பெறப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பன மூலமாகவும் பெறப்பட்டன.

**கலந்துரையாடலும் பெறுபேறுகளும்**

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பரிணாமங்களில் பல்தரப்பட்ட இனப் பிரச்சினைகள் நாளுக்கு நாள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் கூட இலங்கையின் கிழக்குமாகாணத்தில் தமிழ் முஸ்லிம் சமூகத்தினர் செறிவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பாக கல்முனை பிரதேச சபைக்குட்பட்ட நற்பிட்டிமுனை பிரதேசத்தில் பன்னெடுங்காலமாக தமிழ் முஸ்லிம் மக்கள் மிகவும் அந்நியோன்னியமாக வாழ்ந்து வருகின்றார்கள். தமிழ் பிரிவு முஸ்லிம் பிரிவு என்று பிரதேசசபைகள் வேறுபட்டிருகின்றதே தவிர மக்கள் மத்தியில் தமிழர் முஸ்லிம்கள் என்ற எந்தவெரு பிரிவினையும் இதுவரை காலமும் எழுந்ததில்லை என்பது அப்பிரதேசத்தினை ஆய்வு செய்ததன் விளைவால் கண்டறியப்பட்டது.

இப்பிரதேசம் கூட்டுக்கலாசார (additive) பண்பினைக் கொண்டமைந்துள்ளது. மக்களது நாளாந்த செயற்பாடுகளில் இரு சமுகமும் ஒன்றுடன் ஒன்று தங்கியுள்ளது. சமயம், கல்வி, தொழில், பொருளாதாரம், கலை மற்றும் கலாச்சாரம் போன்றனவற்றில் இரு சமூகங்களுக்கிடையிலான உறவு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது. இரு சமுகத்தினரும் பரஸ்பரம் தங்களது சமய அனுஷ்டானங்களில் கலந்து கொள்ளக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். இவ் இரு சமூகத்திற்கும் வெவ்வேறான சமய நம்பிக்கைகளும் மத சடங்குகளும் காணப்படுகின்ற போதிலும்கூட இப்பிரதேச மக்கள் பிற இனங்களை மதிப்பதையும் அதற்குரிய மரியாதையை வழங்குபவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இரு சமூகங்களும் தங்களுக்குள் ஒத்துப்போகின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது. இங்கு ஒரு இனத்தின் உதவியின்றி மறு சமூகத்தினர் வாழ முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் இந்த இரு சமூகத்தவர்களும் இணைந்து தொழில் மேற்கொள்கின்றனர் இந்துக்களின் சாதி அமைப்பு அவர்களது தொழில் முறைகளையும் வாழ்க்கை முறைகளையும் பிரித்தாலும் வயல் வேலை, மீன்பிடித்தொழில், தச்சன், கொத்தன், சில்லறை வியாபாரம், கூலித்தொழில் வேலைகளில் இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் தொழிலாளர்களாக இணைந்தே இருக்கின்றனர் முஸ்லிம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் தமிழ் இளைஞர்கள் தொழில் புரிவதும் தமிழ் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் முஸ்லிம் இளைஞர்கள் தொழில் புரிவதும் முஸ்லிம்களின் பொதுச்சந்தை மற்றும் சில்லறைக் கடைகளில் தமிழ் சமூகம் தங்கியிருப்பதும் அவசர தேவைகளின் போது கடனுதவிகளை ஒருவருக்கொருவர் பெற்றுக் கொள்வதும் என இரு சமூகத்தினரும் பன்னெடுங் காலமாக நெருங்கிய தொடர்பினைக் கொண்டு இணைவு (cohesiveness) ரீதியாக வாழ்ந்து வருகின்றனர். இவ்விரு சமூகத்தினரும் தங்களது விஷேட தினங்களில் தங்களால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டங்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதும் இந்துக்களின் தைப் பொங்கல் தினங்களில் முஸ்லிம்கள் பொங்கல் உண்ண ஆசையுடன் காத்திருப்பதும் என கலாசார பரிமாற்றத்தினை (transmission) மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இந்துக்களின் திருமணச் சடங்குகளில் முஸ்லிம்கள் ஆர்வமாக கலந்து கொள்வது மட்டுமன்றி அவர்களின் வேலைகளில் பங்கெடுப்பதும் முஸ்லிம்களின் திருமணச் சடங்குகளில் இந்துக்கள் ஆர்வமாக கலந்து கொள்வதும் அன்றாடம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. இந்துக்களின் திருமணச் சடங்குகளை ஒட்டிய தாலிகட்டுதல், மோதிரம் மாற்றுதல், மாப்பிள்ளயை கூட்டிவரல், மணப்பெண் அலங்காரம் மற்றும் கால் கழுவுதல் முதலான சடங்கு சம்பிரதாயங்கள் முஸ்லிம் சமூகத்தினர் மத்தியிலும் பின்னிப் பிணைந்து காணப்படுவதோடு பிற கலாசார பாரம்பரியங்களை விரும்பி ஏற்றுக் கொள்கின்ற கூட்டுக்கலாசார மரபு காணப்படுகிறது.

மேலும் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய ஒரு விடயம் இரு இனத்தவர்களுக்கிடையிலான மொழிப் பிரயோகம் ஆகும். முஸ்லிம்களின் அரபுச் சொற்களை இந்துக்கள் தங்களது நாளாந்த வாழ்வில் பயன்படுத்துவதோடு அதன் உச்சரிப்புகளை மிகத் தெளிவான முறையில் உச்சரிப்பதையும் அவதானிக்க முடிந்தது. “இன்ஷா அல்லாஹ்”, “பிஸ்மில்லாஹ்”, “அல்ஹம்துலில்லாஹ்” என்பன அன்றாடம் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அரபுச் சொற்களாகும். இவற்றை தமிழ் சமுகத்தினர் எவ்வித பாகுபாடும் இன்றி தங்களது பேச்சு வழக்கில் உபயோகிக்க பழகியவர்களாக காணப்படுகின்றனர். முஸ்லிம்களைப் போன்று தமிழர்களும் யாதாயினும் ஒரு விடயத்தை எதிர்பார்த்து நிற்பதற்கு “இன்ஷா அல்லாஹ்” என்ற சொல்லை சரளமாக பயன்படுத்துவதானது மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது.

மேலும் இரு சமூகத்தவரினதும் பிள்ளைகள் பெரும்பாலும் கலவன் பாடசாலைகளிலே (Mixed School) கல்வி பயில்கின்றனர். கல்முனை கார்மேல் பற்றிமா தேசியப் பாடசாலை, கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலைகளிலே அதிகமான பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர். சிறுவயதிலிருந்தே நட்புறவுடன் இரு சமுகத்தினரது பிள்ளைகளும் ஒன்றாக கல்வி கற்கின்ற நிலையானது இரு சமூகத்தினர் மத்தியிலும் இன்றும் வலுச் சேர்க்கும் ஒரு விடையமாகக் காணப்படுகின்றது எனலாம்.

இதற்கு அப்பால் இவ்விரு சமூகத்தை சேர்ந்த பிள்ளைகளும் ஒன்றாகவே பிரேத்தியோக வகுப்புக்களுக்கு செல்கின்றமை ஒன்றாகச் சேர்ந்து பொழுதுபோக்கு நேரங்களில் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றமை என்பன இவ்விரு சமூகத்தின் மத்தியில் இன ஐக்கியம் ஏற்பட காரணமாகிறது. இதன் மூலம் அனைத்து சமூகத்தினர் மத்தியிலும் இளமையிலே இணைந்து வாழும் மனப்பக்குவம் வளர்கின்றது என அப்பிரதேச மக்களின் கருத்துக்களின் வாயிலாக பெற முடிந்தது.

இவ்வாறாக இன நல்லுறவுகள் பெரும்பாண்மையாக இருக்கின்ற போதிலும் ஒரு சிறு குறிப்பிட்ட தேவைகளின் நிமித்தம் இன முரண்பாடுகளும் இடம்பெறுவதாகவும் அப்பிரதேச மக்களின் கருத்துக்களில் இருந்து கண்டறியப்பட்டது. இது வளர்ந்து வரும் இளம் சமூகத்தினர் மத்தியில் இடம்பெறும் கருத்து வேறுபாடுகளின் நிமித்தம் ஏற்படுவதாகவும் பின் குறிப்பிட்ட சில காலத்தின் பின் அவை மறைந்து விடுவதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர். இந்த வகையில் நற்பிட்டிமுனைப் பிரதேசத்தில் இனங்களுக்கு இடையிலான உறவானது பெரும்பாலும் நல்லுறவாகவே காணப்படுவதாக கண்டறியப்பட்டது.

**முடிவு**

இலங்கையில் பன்னெடுங்காலமாக ஒட்டி உறவாடி வரும் இரு இனங்களாக தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் காணப்படுகின்றனர். இவ்விரு இனங்களுக்கு இடையிலான நல்லுறவுகள் என்றும் வளரவேண்டும். அதன் மூலம் பிராந்தியத்தினதும் தேசத்தினதும் வளர்ச்சிக்கு நாம் காலாக நிற்க வேண்டும். இனத்தலைவர்கள், இலக்கியவாதிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள்,

பத்திரிகையாளர்கள் மற்றும் உழைக்கும் வர்க்கமாகிய நாம் அனைவரும் இவ்விரு இனத்தவர்களின் நல்லுறவுக்கு பங்காற்றும் முக்கிய பங்காளிகளாக இருக்க வேண்டும்.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**


ஜெமில்.எஸ்.எச்.எம். (1997). அம்பாரை மாவட்ட முஸ்லிம்கள். கொழும்பு, கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு.

ஜோர்ஜ் ப்ரெக்ஸ், பார்ட் க்ளெம் (2004). பல்வகைமையினைக் கையாள்தல் : இலங்கையின் சமாதானமும் முரண்பாடும் பற்றிய சொல்லாடல். க்ளின் ஜென்டால், சர்வதேச உறவுகள் நிறுவனம்.

சூரன் ஏ.ரவிவர்மா (2002). சிறுபான்மையினர் சில அவதாரங்கள்.

Nuhman M.A (2007). Sri Lankan Muslims; ethnic identity within cultural diversity. Colombo, International Centre for Ethnic Studies.

முஹம்மது மஸ்தான் முஸ்தபா (2015). வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம் 1990. முசலி இளைஞர் ஒன்றியம்.

அனஸ்.எம்.எஸ்.எம் (2003). இலங்கையில் இனக்கலவரங்ளும் முஸ்லிம்களும். பேராதனை, தகவல் மற்றும் நலன்புரி அமைப்பு.

முஹம்மது அலி றசாக் (2005). இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம்களும். ஈரம் வெளியீட்டகம், அக்கரைப்பற்று.


**ஆய்வுக் கட்டுரைகள்**


Ross Duncan & Mike Lopes (2017). Reclaiming Reconciliation through Community Education for the Muslims and Tamils of Post – War Jaffna, Sri Lanka. Retrieved from journals.sagepub.com/home/ric.

Mohamed Fowser (2004). Religious Symbolism and politics in Sri Lanka: Muslim's Grievances retrieved from http;//www.researchgate.net/publication/311678509

Mohamed Agus Yusoff, Nordin Hussain & Athembawa Sarjoon (2004). Positioning Muslims in Ethnic Relations, Ethnic Conflict and Peace Process in Sri Lanka retrieved from http;//dx.doi.org/10.5539/ass.v10n10p199


**நேர்காணல்கள்**

வி. மயூரிக்கா 43, பிள்ளையார் கோயில் வீதி நற்பிட்டிமுனை 02.

ப. செல்வநாயகம் 115/2 பிரதான வீதி, நற்பிட்டிமுனை 01

க. கனகம்மா 127, பழைய குறக்கு வீதி, நற்பிட்டிமுனை 01

சி. கல்யாணி 46, பிள்ளையார் கோவில் வீதி நற்பிட்டிமுனை 02

பூ. பாலசிங்கம், அம்பலத்தடி பிள்ளையார் வீதி நற்பிட்டிமுனை.

மு.க. பாத்திமா சாறா, நற்பிட்டிமுனை 01

அ.ம. முத்தும்மா, நற்பிட்டிமுனை 02

கா. றசீட் நற்பிட்டிமுனை 02

மு.கா. ஆதம்லெவ்வை நற்பிட்டிமுனை 03

பாத்தும்மா சாகிறா நற்பிட்டிமுனை 04